# கரந்தைத் தமிழ்ச்சங்கம்,

## தஞ்சை.

விரோதிகிருதுஸ்ரீ வைகாசிமீ கஉ
தாபிக்கப்பெற்றது.

---

# இரண்டாவது ஆண்டு நிறைவு
# அறிக்கைப்பத்திரம்.

---

பரிதாபி—பிரமாதீசஸ்ரீ

---

TRICHINOPOLY:
S. GEORGE & Co.,

1913.

உ

# கரந்தைத்தமிழ்ச்சங்கம்.

## தஞ்சை.

---

## இரண்டாவது ஆண்டுநிறைவு

### அறிக்கைப்பத்திரம்.

---

பரிதாபி—பிரமாதீச ௵.

---

"மன்றவாணன் மலர்திருவருளால், தென்றமிழ் மகிமைச் சிவணியசெய்த, அடியவர்கூட்டமும் ஆதிச்சங்கமும், படியின்மாப்பெருமை பரவுஞ்சோழனும், சைவமாதவருந் தழைந்தினிதிருக்கும், மையறுசோழவள நாட்டி"ற்கோர் வதனமெனப்பொலியும் தஞ்சையில் திலதமெனமிளிரும் கரந்தைப்பதியில் சென்ற வீராண்டுகளாய்த் தமிழ்ப்பயிர் விளைப்பான்றொடங்கி யுழைத்துவரும் நம் சங்கத்தின் முயற்சி எல்லைகாண்டல் ஆவசியகமாம். இவ்வாண்டு அறிக்கைப்பத்திரத்தை வெளியிடுவதில், நஞ்சங்கத்தின் வேலையும், ஊக்கமும் எங்களைப்போலவே எங்களுக்கு உதவிபுரிந்து வந்த தமிழ் நாட்டகத்தாருக்கும்

பெருமகிழ் வூட்டுமென்னும் நம்பிக்கை முற்றுட
உடையேம்.

நமது சங்கத்தின் முதல் வருட பூர்த்தி
கொண்டாட்டத்தில் சென்னை வித்துவான் கன
கா. நமச்சிவாய முதலியாரவர்கள் விசயஞ்செய்
பிரசங்கமாரி பெய்து வாடியுலர்ந்ததமிழ்ப்பயிர் தல்
இளந்தளிர்காட்டித் தலை எடுக்கச்செய்தது பலரு
அறிவீர்கள். பின்னரும் அன்றுகூடி தாம் கற்றறிந்
நவநவமான அரிய பலவிஷயங்களை எமக்கெடு
தோதி எங்களுக்கறிவுறுத்தினர் பலர். இப்பேரு
ளாளர்களின் உதவியும் மறக்கற்பாற்றோ ?

அங்கத்தினர்.

நமது சங்கத்தில், சென்ற ஆண்டின் இறுதி
யில் அங்கத்தினராயிருந்து தமிழ்ப்பயிர் விளைத்தா
பதினால்வராவர். இவருள் ஒருவர் தமது வேலை நிமித்
மாக பிறவூருக்கு மாற்றப்பட்டமையின் சங்கத்தி
ன்றும் விலகவேண்டியதாயிற்று. இவ்வாண்டில் எம்
முயற்சி நலங்கண்டு தம் அரும்பெறல் உதவிநீட்டி
எமது நோக்கம் இனிது நிறைவேற்றுதல் கருதி
சங்கத்தில் புக்கார் பதினெழுவர். இவர்கள் கூட்டுற
வின் பயனாக நஞ்சங்கம் இன்னும் பல அருந்தொழி
ல்கள் மேற்கொண்டு தமிழ்த்தாயின்பால் தன்கடப்
பாடு செலுத்துமென்பது திண்ணம். ஆயினும் நஞ்
சங்கத்துக் காரியங்கள் விசேஷமாய் வெளியூர் அங்
கத்தினர்களுடைய உதவியை மேற்கொண்டே செய்
யவேண்டியிருப்பது ஒரு குறையேயாம். இனி

மதுரியிலேயேயுள்ள தமிழபிமானச் செல்வர் பலர் முன்வந்து அங்கத்தினராயமர்ந்து சங்க வேலைகளை மேற்கொண்டு எமது முயற்சியை வளமபெறச் செய்வார்களென்னும் வேண்டுகோளுடையோம்.

## கூட்டங்கள்.

அங்கத்தினரைப் பிரசங்க முறையிற்பழக்கு முன்னர் தக்க வித்துவான்கள் முன்னிலையில் சிறிது நூலாராய்ச்சிகள்செய்வித்துப்போதுமான இலக்கிய விலக்கணப் பயிற்சியுண்டான பின்னரே அவ்வழியிற் பழக்குதல் தகுதியெனமொழிந்த சில பெரியார் சொற்கிணங்கி இவ்வருட ஆரம்பந்தொடங்கிப் பெரிய புராண ஆராய்ச்சி நடந்துவருகின்றது. இவ்வாராய்ச்சி செய்ய யாதுங் கைம்மாறு கருதாது சிறியேமைக் கடைதேற்றுதலே தங்கடமையாகக் கொண்டு தங்கள் தங்கள் சபைகளில் நடக்கும் காலக்ஷேபங்களையும் நிறுத்தி முன் வந்துதவிய புராணப்பிரசங்க சபைத்தலைவர் வித்வான் கனம் சிவ. சோலைமுத்துப் பிள்ளையவர்கள், தஞ்சை சைவசித்தாந்த சபைத்தலைவர் வித்வான் கனம் மகாதேவபிள்ளையவர்கள், இன்னும் இராமசாமி வன்னியரவர்கள், உலகநாத பிள்ளையவர்கள், சிங்காரவேலு முதலியாரவர்கள், சுப்பிரமணிய ஐயரவர்கள், சிவஞானம் பிள்ளையவர்கள், வேங்கடசாமி நாட்டாரவர்கள், சுவாமிநாத முதலியாரவர்கள், பாலசுப்பிரமணியபிள்ளையவர்கள், சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், பழனிவேல் பிள்ளை

யவர்கள், முதலிய பல வித்துவான்களையும் எங்கள் மனதார வந்திக்கின்றேம்.

இவ்வாறு புராணப் பிரசங்கம் நடந்த கூட்டங்களின் தொகை 33; இவைகளில் நடைபெற்ற திருவிருத்தம் 659; அதாவது கூட்டமொன்றிற்கு ஏறக்குறைய 20 செய்யுட்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

இனி இவைகளையன்றி நான்கு பிரபல பொதுஜனக்கூட்டங்கள் நடந்தேறி யிருக்கின்றன. இக்கூட்டங்களில் ஒன்று நீங்க மற்றவைகளில், தமிழை ஆதரியாது பலருங் கைவிட்ட இக்காலத்தும் சிற்றன்னை முறையாகவேனும் ஏதோ ஒருவாறு பரிபாலித்துவந்த சர்வகலா சங்கத்தினர் அதை முற்றவும் கை நெகிழ விடுதல் கருதிச்செய்த ஏற்பாடுகளைக்குறித்தும் அரசாங்கத்தாரால் தயாரித்து வரும் அகராதி சம்பந்தமாகவும், சமீபத்தில் சர்வ கலா சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சுதேச பாஷாபட்ட பரீக்ஷை (Oriental Titles Examination) விதிகளிலுள்ள சில குறைபாடுகளைப் பற்றியும் ஆலோசனை செய்து அச்சங்கத்தாரையும் அரசாங்கத்தாரையும் இவ்விஷயங்களை புனராலோசனை செய்து தக்க ஏற்பாடுகள் வகுக்கவென விண்ணப்பம் செய்யப்பட்டன. இக்கூட்டங்களின் விபரம் வருமாறு:—

I. சென்ற பரிதாபி௵ மார்கழி௴ 12௳ (15—12—12) பெரிய புராணத்தில் பரவை நாச்சியார் திருக்கல்யாணம் பல பெரியோர்களின் முன்

ஞ்சிலையில் வித்வான் கனம் சிவ. சோலைமுத்துப் பிள்ளையவர்களால் பிரசங்கிக்கப்பட்டு மிகவும் விமரிசையாக நடந்தேறியது.

II. சென்ற பரிதாபிஞு மாசிமீ ௧௨௨ (23-2-13) யன்று அரசாங்கத்தாரால் தயாராகி வரும் தமிழக ராதி சம்பந்தமாகவும், கிழைத்தேய பாஷாபட்டப் பரீக்ஷை சம்பந்தமாகவும், சமதரசாங்கத்தாரைக் குறை இரந்துகொள்ள, வணிக குலதிலகரும், அருந்தமிழ் வள்ளலுமாகிய கானாடு காத்தான் ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பெருஞ் சபை கூடியது. அன்று கும்பகோணம், மதுரை, நாகை, மன்னார்குடி, திருச்சி முதலியவிடங்களிலிருந்து பல வித்துவான்கள் விஜயஞ்செய்து சபையைக் கௌரவப்படுத்தினார்கள்.

III. சென்ற பரிதாபிஞு மாசிமீ 23௳ (6-3-13) யன்று சென்னைச் சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில் தமிழ் கட்டாய பாடமாக நியமிக்கப்படவேண்டுமென்று மனுச் செய்துகொள்ள தஞ்சை கல்யாண சுந்தரம் உயர்தரக்கலாசாலைத் தலைமை உபாத்தியாயர் கனம் T. இராசமையங்கார் அவர்கள் B.A., L. T., அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம்கூடியது.

IV. பிரமாதீசஞு சித்திரைமீ ௧௳ (13-4-13) யன்று, தமிழ் கட்டாய பாடமாக இருக்கவேண்டிய தில்லை யெனச் சர்வ கலாசாலை சங்கத்தினரால் தீர்மானிக்கப்பட்ட பிறகு, பின்னும் அதை வற்புறுத்தி,

ஆங்கிலபண்டிதர்களின் ஆக்ஷேபங்களைத்தக்கநியாய வாயிலாய் மறுத்துத்தமிழைக்கட்டாய பாடமாகச் செய்யவேண்டிய ஆவசியகத்தைத்தெள்ளிதின் ஓர் புத்தக ரூபமாக வெளியிடவேண்டி ஹைக்கோர்ட் வக்கீல் கனம் சாம்பமூர்த்திராவ் அவர்கள் B. A., B. L., அக்கிராசனத்தின் கீழ் ஓர் சபை கூடியது.

இக்கூட்டங்களை யன்றி தொழிலாலோசனைக் கூட்டம் ஒன்றும் காரிய நிர்வாக சபைக்கூட்டம் மூன்றுமாக இவ்வருடத்தில் நடந்தேறிய கூட்டங்கள் நாற்பத்தொன்றாம்.

## புத்தகசாலை.

"கரந்தைத்தமிழ்ச்சங்கக் கலாநிலையம்" எனப்பெயரிய நமது சங்கப்புத்தகசாலை பரிதாபிஞு ஆனிமீ ௩௧௨ யன்று நம் சங்க ஆதரிப்பாளருள் (Patron) ஒருவராகிய கனம் வா. கோபாலசாமி இரகுநாத இராசாளிசாரவர்களால் திறக்கப்பட்டது. இது தாபிக்கப்பட்டதுமுதல் நம் சங்கத்தினர்க்கும், மற்றும் நமது அபிமான சீலர்களாகிய பண்டிதர்களுக்கும் மிகவும் உபயோகமுள்ளதாயிருந்துவருகிறது. ஆயினும் புத்தகசாலைக்கு இன்றியமையாத பல சங்க இலக்கியவிலக்கணங்களும், தமிழ்ப் பாஷா தத்துவ, சரித்திர ஆராய்ச்சிகளுக்கு வேண்டப்படுவனவாகிய சில ஆங்கில புத்தகங்களும் இல்லாத பெருங்குறையை நிவர்த்திப்பது அருந்தமிழபிமானிகளின் கடனாம். நமது புத்தகசாலையிலுள்ள நூல்களின் தொகை 112; இவைகளில் சஙகத்

தின் மூலதனத்திலின்றும் வாங்கியது 31 ; தமிழ பிமானிகளால் உதவப்பட்டது 81.

இடம்.

நமது சங்கத்திற்கென சொந்தமான இடவசதியில்லாக் குறையால் ஏற்படும் கஷ்டங்களை அளவிட்டுரைத்தல் கூடாததாகும். குறித்த காலங்களில் பிறர் கட்டிடங்களில் பிரவேசித்து நமது கூட்டங்கள் நடத்துவது கூடாதாயிருப்பதோடு, கூட்டங்களுக்குவேண்டிய பாய், விளக்கு முதலிய தட்டுமுட்டுகளை ஒவ்வொரு முறையும் எடுத்துச் செல்லுதல் சுலபமாயில்லை. நாம் இப்போது கூட்டங்கூடிக் கல்வி பயிலுவதற்கு கரந்தை ஸ்ரீ அப்பாவு செட்டியாரவர்கள் தமது சத்திரத்தில் இடங்கொடுத்து உதவியது பாராட்டற்பாலதேயாயினும் பெரிதும் பயன்படுவதற்குத் தகுதியான வசதிகளை அமைத்துக் கொடுக்க அவர்களுக்கு மனதில்லாமை எம்முடைய நிர்பாக்கியமேயாம். நஞ்சங்கத்தினர் வேண்டும்போது சென்று ஏகாந்தராயிருந்து நூலாராய்ச்சி செய்யவும், பாடங்கேட்டுக்கொள்ளவும் எவ்வளவு முட்டுப்பாடுகளிருக்கின்றனவென்பது பிரசித்தம். புத்தக அலமாரியை இங்கு வைத்துக்கொள்வதற்கும் இயலாது நமது சங்கத்தலைவர் இல்லத்தில் வைத்திருப்பதே சொந்தவிடமில்லாக் குறையால் வரும் இடர்ப்பாடுகளைத் தெள்ளிதில் புலப்படுத்தும். இப்பெருங் குறையினை அருந்தமிழாளர் அருள்கூர்ந்து விரைவில் அகற்றிவைப்பாரென்னும் வேண்டுகோள் பெரிதும் உடையேம்.

எமது நோக்கம்.

மேற்கூறிப்போந் தவற்றால் தமிழ் நன்மக்களை அடிக்கடி ஒருங்கு கூட்டி அவர் தம்முள் களித்து உறவாடி அளவளாவுந் துணையான் "எல்லாப்பண்புந்தாங்கு மொருமொழி பேசுமதனுலெய்தும் தவிராத நட்பினைப்போல் தகுநட்பு" வேறில்லையாதல் காட்டி நம் சங்கம் அவருள் ஒற்றுமையுண்டாக்கியது பலரும் அறிந்தபடி. இப்பொழுது நம் பாஷையை உள்ளபடி நோக்குமிடத்து அதற்காவது அதையே விரும்புவாருக்காவது யாதும் பெரும் பயன் இருப்பதாகத்தெரியவில்லை. தமிழைழயோதுவார் தரித்திரத்தையே நாடுவாராகவிருக்கின்றனர். இதற்குக் காரணம் யாதென விசாரிப்பின் தமிழ்ப்பயிற்சியான் இப்போதுண்டாகும் இலௌகீகப் பிரயோசனம் ஒன்றுமில்லாமையேயாம். தமிழர்களை முன்னுக்குக்கொணர்தல் கருதி எழுந்த நஞ்சங்கம் அதற்கு அநுகுணமான காரியங்களைத் தேடுதல் முறையாகும். மதுரை, சிதம்பரம் முதலியவிடங்களில் தாபிக்கப்பெற்றுள்ள தனித் தமிழ்க்கலாசாலைகள்போல வேறு பல எற்படுவதால் அதிகப் பிரயோசனமில்லையாகசீவனுர்த்தத்திற்கு உதவும்படியான கைத்தொழில்களை நமது தமிழ்ப் பாடசாலைகளில் கற்றுக்கொடுக்கும்படி எற்பாடு செய்து இக்குறையினை நிவர்த்தி செய்யும் கருத்துடையோம்.

நமது நாட்டில் பண்டைக்காலத்து நின்று நிலவி இறந்துபட்ட சிறந்த கைத்தொழில்களையும் அவற்

திற்குறைன்றியமையாதசாஸ்திரங்களையும்(Sciences) கற்பிக்கும் பெரிய செந்தமிழ்க் கலாசாலை யொன்று தாபிப்பின் மாணவர்கள் தமிழ்ப் பயிற்சியோடு சீவனோபாய வழிகளிலும் தேர்ச்சி பெறுவாராகையால் நம்மனோர்க்குத் தமிழ் பால் இப்பொழுதுள்ள வெறுப்பு நீங்கிப் பெரிதும் விருப்புண்டாகு மென்பதில் எட்டுணையும் ஐயமின்று.

இன்னும் பிள்ளைகள் பயிலும் கைத்தொழில்களுக்கு வேண்டும் சாஸ்திர நூல்களைப் புதிதாக மேனாட்டு மொழிகளினின்று மொழி பெயர்த்துக் கொள்ளும் கட்டாயம் ஏற்படுகின்றமையின் நமது பாஷையில் சாத்திர நூல்களில்லாக் குறையும் நிவர்த்தியாதல் கண்கூடாம். இதைப்பற்றி விரித்துக் கூறவேண்டுவதின்று. இத்தகைய பெருங் கலாசாலையொன்று தாபிப்பது எங்கள் முடிவான நோக்கமாயினும் இதுபெருத்த திரவிய சகாயமின்றி ஆகாத காரியமாகையால் கூடிய சீக்கிரம் நம் தமிழபிமான சீலர்களின் உதவிகொண்டு கைத்தொழிலோடு தமிழும் கற்பிக்கும் ஒரு சிறிய பாடசாலையாயினும்தாபிக்கக் கருதியுள்ளோம்.

## இரங்கல்.

அடிக்கடி நஞ்சபைக்கு வந்து தாம் கற்றுத்தேறிய ஆங்கில சாத்திர நுட்பங்களை எங்களுக்கெடுத்தோதி உதவிபுரிந்துவந்த கனம் ஜோசப்பிள்ளையவர்கள்காலஞ்சென்றமை குறித்து மிகவும் பரிதபித்து இரங்குகின்றோம்.

வாழ்த்து.

நமது சங்கத்தின் நோக்கமும், அதை நிறைவேற்றுமாறு நம் உழைப்பும் கண்டாம். இனி, யாங்கொண்ட கருமத்தில் தளராவண்ணம் அவ்வப்போது ஊக்க மூட்டியும், தமதரிய யுக்தி யோசனைகளால் எமது முயற்சியை வளம் படுத்தியும் கீழைத்தேய பாஷாபட்டப்பரீக்ஷை விதிகளிலுள்ள சில குறைகளைப்பற்றி அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டி ஏற்படுத்திய பெருங் கூட்டத்தின்போது, அக்கிராசனம் வகிப்பதாக ஒப்புக்கொண்டிருந்த கனம் திவான் பகதூர் இராமசாமி செட்டியாரவர்கள் எதிர்பாராத சில இடர்ப்பாடுகளால் வரயியலாது போக, யாம் தத்தளித்துத் தடுமாறிய காலத்து வான் மாறினும் தான் மாறாக் கருணைப்பெருக்கத்தோடு எம்பால் கடைக்கணித்து ஈண்டுபோந்து மிக அழகாக அக்கூட்டத்தை நடை பெறுத்திய கனம் பெத்நாச்சி செட்டியாரவர்களுக்கும் தமிழ்ப்பெரும் பயிரை ஓங்குவிப்பதே தமது கருமமாகக் கொண்டு தமது உடலுயிராதியவும் நமது தமிழன்னையாருக்கே தருப்பணஞ் செய்த அருந்தமிழ் வள்ளல் ஸ்ரீ வா. கோபாலசாமி இரகுநாத இராஜாளியாரவர்களுக்கும் எங்கள் என்று மறவாக்கடப்பாட்டைச் செலுத்துகின்றோம். சபைக்கு அலங்காரமாகத் திகழும் சில சபைத்தலைவர்கள்போலன்றி இரவும் பகலும் சங்கமே கவலையாக எங்களோடு ஓடியாடி உழைத்துத்தமதரிய வேலைகளையும் நெகிழவிட்டுத் தம் அவகாசத்தைச் சங்கத்திற்குரிமையாக்கிய நமது சங்கத்தலைவர் கனம் த. வே உமாம

ஹேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும், வேண்டும்போதெல்லாம் சற்றும் சலியாது பலவாறு எமக்கு உதவிய அருந்தமிழ்ச் சீலர்களாகிய வக்கீல் கனம் I. குமாரசுவாமி பிள்ளையவர்களுக்கும், வக்கீல் கனம் M. S. கல்யாண சுந்தரையரவர்களுக்கும், காசுக்கடை கன்ம் சோமநாதராவ் அவர்களுக்கும், மளிகை கனம் வீ. சுப்பராய பிள்ளை அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச்செலுத்துகிறோம்.

இனி, இவ்வாறே இன்னும் பலர் முன் வந்து எங்களையும் ஊக்கமூட்டி அருந்தமிழ் வளம்பெற ஓங்கி யாண்டும் நின்று நிலவச் செய்வார்களாக.

கரந்தட்டாங்குடி,<br>பிரமாதீச௵ ஆனி௴<br>௧௨.

பா. கல்யாணசுந்தரம்,<br>காரியதரிசி.

## அனுபந்தம் 1.

---

## கரந்தைத்தமிழ்ச்சங்கம்,
## தஞ்சை.

---

### ஆதரிப்பாளர்.

---

ஸ்ரீமான் வா. கோபாலசாமி இரகுநாத
இராசாளியார் அவர்கள், F. T. S, O. S. E.

ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி
செட்டியாரவர்கள், M. R. A. S.

---

### சங்கத்தலைவர்.

---

ஸ்ரீமான் த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை
அவர்கள் B. A, B. L.

---

### காரியதரிசி.

---

ஸ்ரீமான் பா. கல்யாண சுந்தரம்பிள்ளை
அவர்கள்.

---

### பொருளாளர்.

---

ஸ்ரீமான் சி. தெக்ஷணாமூர்த்திப்பிள்ளை
அவர்கள்.

---

## அங்கத்தினர்கள்.

---

௧. ஸ்ரீமான் த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை அவர்கள். B.A, B.L.

௨. ,, பா. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள்.

௩. ,, சி. தெக்ஷிணாமூர்த்திப்பிள்ளை ,,

௪. ,, R. வேங்கடாசலம் பிள்ளை ,,

௫. ,, அ. கணபதி பிள்ளை ,,

௬. ,, வே. இராதா கிருஷ்ண பிள்ளை ,, B.A.

௭. ,, M. மாதுசாமி வன்னியர் ,,

௮. ,, R. கிருஷ்ணசாமி பிள்ளை ,,

௯. ,, T. S. முருகேசம் பிள்ளை ,,

௰. ,, அயில் ரெட்டியார் ,,

௧௧. ,, T. N. குருமூர்த்திப்பிள்ளை ,,

௧௨ ,, V. கோவிந்தசாமி நாயுடு ,,

௧௩. ,, P. வேங்கடாசலம்பிள்ளை ,,

௧௪. ,, T. இராசமையங்கார் ,, B.A. L.T.,

௧௫. ,, M. R. ஜெகதீச செட்டியார் ,,

௧௬. ,, ஆ. ச. ஆறுமுகம்பிள்ளை ,,

௧௭. ,, லோ. சொக்கலிங்கம்பிள்ளை ,,

| | | | |
|---|---|---|---|
| ௧௮. | ஸ்ரீமான் | பொ. சுப்பிரமணிய பிள்ளை | அவர்கள் |
| ௧௯. | ,, | கோ. கோபாலகிருஷ்ணபிள்ளை | ,, |
| ௨௰. | ,, | நா. துரைசாமிபிள்ளை | ,, |
| ௨௧. | ,, | பக்கீர் முகம்மது சாஹிப் | ,, |
| ௨௨. | ,, | E. R. நடேசபிள்ளை | ,, |
| ௨௩. | ,, | கோவிந்தராஜன் | ,, |
| ௨௪. | ,, | மு. பாலகிருஷ்ணபிள்ளை | ,, |
| ௨௫. | ,, | வீ. சு. சிதம்பரம்பிள்ளை | ,, |
| ௨௬. | ,, | சா. நடேசம்பிள்ளை | ,, |
| ௨௭. | ,, | ஜி. சிவராமகிருஷ்ணபிள்ளை | ,, |
| ௨௮. | ,, | ஐ. குமாரசாமிபிள்ளை | ,, B.A. |
| ௨௯. | ,, | R. M. K. நடராஜசெட்டியார் | ,, |
| ௩௰. | ,, | உ. நா. அப்பாசாமி ஐயர் | ,, |

# அனுபந்தம் II.

## கரந்தைத் தமிழ்ச்சங்கம்,

## தஞ்சை.

## பரிதாபி ஸூ த்தில் வரவு செலவு விவரம்.

| வரவு. | தொகை. ரூ. | அ. | ப. | செலவு. | தொகை. ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| அங்கத்தினர் சந்தா ... ... | 25 | 14 | 8 | பொதுக்கூட்டச் செலவு ... ... | 20 | 14 | 2 |
| | | | | அச்சுக்கூலி ... ... ... | 11 | 2 | 6 |
| நன்கொடை ... ... ... | 171 | 0 | 0 | ஸ்டேஷனரி ... ... ... | 2 | 1 | 0 |
| | | | | பிரயாணச் செலவு ... ... | 6 | 14 | 9 |
| சங்கம் பீரோ ஒன்று விற்றுமுதல் ... | 9 | 0 | 0 | தபால், தந்தி | 2 | 10 | 6 |
| | | | | சங்கத்திற்குப் புத்தகம் வாங்கியது ... | 33 | 15 | 0 |
| * புத்தகம் விற்றுமுதல் ... ... | 82 | 15 | 6 | முதல் வருஷோத்சவத்திற்கு ... | 35 | 9 | 6 |
| | | | | பீரோ இரண்டுக்கு ... ... | 32 | 10 | 3 |
| * மயிர்ச்சாந்து விற்றுமுதல் ... ... | 11 | 0 | 0 | * விற்பனைக்குப் புத்தகம் வாங்கியது ... | 93 | 9 | 6 |
| | | | | * ,, மயிர்ச்சாந்து வாங்கியது ... | 11 | 6 | 0 |
| சில்லரை ... ... | 1 | 12 | 3 | | | | |
| | | | | மொத்தம் ... | 250 | 13 | 2 |
| | | | | பாக்கியிருப்பு:— ... | | | |
| | | | | சங்கத்தலைவர் வசம் ரூ. 32—14—9 | | | |
| | | | | பொக்கிஷதார் வசம் ரூ. 17—14—6 | 50 | 13 | 3 |
| மொத்தம் ரூ ... | 301 | 10 | 5 | மொத்தம் ரூ ... | 301 | 10 | 5 |

* விற்பனையாகவேண்டிய இன்னுமுள.

தஞ்சை, கரந்தை,
பிரமாதீச ஸூ ஆனிமீ கூ.

பா. கல்யாணசுந்தரம்,
காரியதரிசி.

சி. தேசிகாமூர்த்தி,
பொருளாளர்.

பரிசோதனையிற் சரியெனக் காணலாயிற்று.

அ. கணபதி,
கணக்குப் பரிசோதகர்.